# நவம்பர் – 08 – புதன்

## அல்லேலூயா! ஆண்டவருக்கு அஞ்சிநடப்போர் பேறுபெற்றோர்: திபா. 112:1

## முதல் வாசகம் : உரோமையர் 13 : 8 – 10

சகோதர சகோதரிகளே! நீங்கள் யாருக்கும் எதிலும் கடன்படாதீர்கள். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்த வேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும். பிறரிடத்தில் அன்புகூர்பவர் திருச்சட்டத்தை நிறைவேற்றுபவர் ஆவார். ஏனெனில், ”விபசாரம் செய்யாதே, கொலை செய்யாதே, களவு செய்யாதே, பிறருக்குரியதைக் கவர்ந்திட விரும்பாதே” என்னும் கட்டளைகளும், பிற கட்டளைகளும், ”உன் மீது அன்பு கூர்வது போல், உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக” என்னும் கட்டளையில் அடங்கியுள்ளன. அன்பு அடுத்திருப் பவருக்குத் தீங்கிழைக்காது. ஆகவே அன்பே திருச்சட்டத்தின் நிறைவு.

**பதில்பாடல் :** மனமிரங்கிக் கடன் கொடுக்கும் மனிதர்
நன்மை அடைவர்

## நற்செய்தி : லூாக்கா 14 : 25 - 33

அக்காலத்தில் பெருந்திரளான மக்கள் இயேசுவோடு சென்று கொண்டிருந்தனர். அவர் திரும்பிப் பார்த்து அவர்களிடம் கூறியது: ”என்னிடம் வருபவர் தம் தந்தை, தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர் சகோதரிகள் ஆகியோரையும், ஏன், தம் உயிரையுமே என்னைவிட மேலாகக் கருதினால், அவர் என் சீடராயிருக்க முடியாது. தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது. ”உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால், முதலில் உட்கார்ந்து, அதைக் கட்டிமுடிக்க ஆகும் செலவைக் கணித்து, அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்கமாட்டாரா? இல்லாவிட்டால் அதற்கு அடித்தளமிட்ட பிறகு அவர் கட்டி முடிக்க இயலாமல் இருப்பதைப் பார்க்கும் யாவரும் ஏளனமாக, ”இம்மனிதன் கட்டத் தொடங்கினான் ஆனால் முடிக்க இயலவில்லை” என்பார்களே! ”வேறு ஓர் அரசரோடு போர் தொடுக்கப்போகும் அரசர் ஒருவர், இருபதாயிரம் பேருடன் தமக்கு எதிராக வருபவரைப் பத்தாயிரம் பேரைக் கொண்டு எதிர்க்க முடியுமா என்று முதலில் உட்கார்ந்து சிந்தித்துப் பார்க்க மாட்டாரா? எதிர்க்க முடியாதெனில், அவர் தொலையில் இருக்கும்போதே தூதரை அனுப்பி, அமைதிக்கான வழியைத் தேட மாட்டாரா? அப்படியே, உங்களுள் தம் உடைமையையெல்லாம் விட்டுவிடாத எவரும் என் சீடராய் இருக்க முடியாது.

**தியானம்:** இன்றைய தியானத்தில் இயேசுவை பின்பற்றி செல்ல தம் உடமைகளை விட்டு விட வேண்டும் என்பது சிலருக்கு கடுமையான ஒரு போதனையாக தோன்றலாம், மனிதனுடைய உள்ளத்தில் இடம் பிடித்துக் கொள்கின்ற எதுவும் அவனை தமக்கு அடிமையாக முயற்சி செய்யகூடும். இயேசுவை பின்செல்ல வேண்டும் என்றால் எமது உள்ளத்தில் வேறு எந்த பொருளுக்கோ, மனிதருக்கோ நாம் முதன்மையான இடம் கொடுக்கலாகாது. மனித உறவு எதுவும் கடவுளின் உறவுக்கு அடுத்த படியில் தான் அமையவேண்டுமே தவிர அதை முந்திக்கொள்ள கூடாது. இதையே இயேசு போதிக்கின்றார். நம் உயிர் மட்டில் நமக்கு பற்று இருப்பதை நாம் எளிதில் உணர்ந்துகொள்ளலாம். நம் உயிருக்கு ஆபத்து ஏற்படுகின்ற வேளையில் ஒன்றில் நாம் அந்த ஆபத்தை எதிர்த்து போராடுவோம். அல்லது அந்த ஆபத்திலிருந்து தப்பித்து ஓடிப்போவோம். ஆனால் இயேசு உயிர்மட்டில் நமக்கு இருக்கின்ற பற்றினை விட அதிக பற்றோடு நாம் அவரைப் பற்றிக்கொள்ள வேண்டும் எனக் கேட்கின்றார். இதற்கு காரணம் நம் உயிரே கடவுளின் கொடை என்பதுதான். இயேசுவின் பின் நாம் செல்ல வேண்டும் என்றால் நம் உள்ளத்தில் பற்றற்ற நிலை உருவாக வேண்டும், அதே நேரத்தில் கடவுளிடத்தில் நம் பற்று வளரவேண்டும். இயேசுவை பின்பற்றி என்றும் வாழ்ந்திட அருள்தாரும் இயேசுவே ஆமென்.